தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

CC. No. 12 / 2025

PW : 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. இராஜேந்திரன் | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் 01 ம் தேதி ....................... பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

01.04.2025

முதல் விசாரணை

நான் தற்போது வலங்கைமான் ஒன்றியம் கொட்டையூர் நடுநிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்தின் உறுப்பினராக இருந்து வருகிறேன். என்னுடைய கடன் உறுப்பினர் எண் 703. நான் 2012 ஆம் ஆண்டு ரூ.2,92,000/- மேற்படி சங்கத்தில் கடன்பெற்றேன். அதற்கு எனது மாத சம்பளத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் மொத்தம் 18 மாதங்கள் பிடித்தம் செய்துகொண்டார்கள். அதை தவிர 3 தவணை தொகை அதாவது ரூ.5,500/-, 11,000/- ம் நேரடியாக ஆஜர்

எதிரியிடம் கட்டி ரசீது வாங்கினேன். அந்த ரசீதில் அடிக்கட்டை ரசீதில் தேதி மாறியிருந்தது. என்னிடம் எதிரி கொடுத்த 07.10.2013 மற்றும் 12.12.2013 தேதியிட்ட இரண்டு ரசீதுகள் அசாஆ 26 வரிசையாகும். அதனுடைய அடிக்கட்டை ரசீது எண் 4001 மற்றும் 4026 ஆகியவை அசாஆ 27 வரிசையாகும். அதன்பிறகு நான் எல்ஜசியில் லோன்போட்டு வீடு கட்டியதால் 2 லோன்களை கட்டமுடியாது என்பதால் சங்கத்தின் கடனை அடைப்பதற்காக கடன் தொகை நிலுவை குறித்து ஆஜர் எதிரியிடம் கேட்டேன். அவர் 2,45,000 ரூபாய் எனக்கு கடன்நிலுவை தொகை இருப்பதாக கூறினார். முதலில் நான் 21.01.2014 ஆம் தேதி ரூ.85,000/- ஐ ஆஜர் எதிரியிடம் செலுத்தினேன். அதன்பிறகு 3 மாதம் கழித்து எனது வீட்டிற்கான லோன வந்தவுடன் ரூ.1,60,000/ த்தை 25.03.2014 அன்று ஆஜர் எதிரியிடம் நேரில் செலுத்தினேன். ரசீது கேட்டேன். ஆபிஸில் ஒரே பிரச்சனையாக இருப்பதால் கொஞ்சநாள் கழித்து ரசீது தருவதாக சொன்னார் மீண்டும் நான் ஆஜர் எதிரியை வற்புறுத்தியதன் பேரில் 20 ரூபாய் பத்திரத்தை ஆஜர் எதிரிபெயரில் வாங்கி என் பெயருக்கு எவ்வித கடன் நிலுவைதொகை இல்லை என்று அவரே கைபட எழுதிக்கொடுத்தார். அதில் சாட்சியாக சங்கத்தின் தலைவர் ஜெயந்தி என்பவர் கையெழுத்து போட்டுக்கொடுத்தார். அந்த 20 ரூபாய் பத்திர தாள் 8867 தேதி 05.11.2015 அசாஆ 28 ஆகும். (ஆட்சேபணையுடன் குறியீடுசெய்யப்படுகிறது)

இந்த பத்திரம் செல்லாது என்றும் அதனால் சங்கத்திலிருந்து கடன்நிலுவையில்லா சான்று முறையாக வாங்கும்படி சொன்னதால் அதன்படி நான் எதிரியிடம் கடன்நிலுவையில்லா சான்று வழங்கும்படி கேட்டதற்கு அசாஆ 28 ல் உள்ள தேதியான 05.11.2015 தேதியிட்டு எனக்கு சான்று வழங்கினார் அந்த சான்று அசாஆ 29 ஆகும். அதன்பிறகு என் சம்பளத்திலிருந்து எந்த தொகையும் பிடித்தம் செய்யவில்லை ஆனால் அடிக்கடி எனக்கு கடன்நிலுவையிருப்பதாக கூறி நோட்டீஸ் வரும் நான் அதை ஆஜர் எதிரியிடம் கொண்டுபோய் காட்டினால் சங்கத்தில் பிரச்சனை இருப்பதாக கூறி அதை வாங்கிவைத்துக்கொள்வார். அதன்பிறகு 2019 ல் FO அய்யப்பன், மற்றும் ஆடிட்டர் ரெத்தினசபாபதி ஆகியோர் என்னை கூப்பிட்டு விசாரணை செய்தார்கள். மேற்கூறிய ஆதாரங்களை அவர்களிடம் காண்பித்தேன். அவர்கள் என்னிடம் நீங்கள் பணம் கட்டிவிட்டீர்கள் ஆனால் சங்கத்திற்கு வரவு வரவில்லை என்று என்னிடம் சொன்னார்கள், ஆஜர் எதிரியையும் கூப்பிட்டு விசாரித்தார்கள். அதற்கு எதிரி என்னுடைய பணத்தை திருப்பி கட்டிவிடுவதாகவும் சொன்னார். 2019 ஆம் ஆண்டு போலிசார் என்னை திருவாரூரில் உள்ள அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை.

குறுக்குவிசாரணை

நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் போலிசார் விசாரணையிலும் சொல்லிவுள்ளேன் என்றால் சரிதான். 2012 ல் நான் கடன்வாங்கியுள்ளேன். நான் போலிசார் விசாரணையில் 2011 ல் கடன் வாங்கியதாக சொல்லவில்லை. நான் 2012 ஆம் ஆண்டு கடன்பெற்றபிறகு 2013 டிசம்பர் மாதம் வரை நான் பணத்தை செலுத்தினேன். ஆகஸ்டு 2013 வரை எனது சம்பளத்திலிருந்து கடன் தொகைக்கு பிடித்தம் செய்துகொண்டார்கள். இடையில் இருந்த 4 மாதங்களுக்கு நான் பணம் கட்டவில்லை. அந்த காலகட்டத்தில் எனது கடன் தவணை தவறிய கடன் என்றால் சரிதான். எனது பெயரில் ஒரு லோன் எல்ஐசியில் வீடுகட்டுவதற்காக போட்டு கடன் வாங்கினேன். ஒரு கடன் நிலுவையில் இருக்கும்போது மற்றொரு கடன் வாங்குவது தவறு என்றால் சரியல்ல. எல்ஜசி லோன் வந்தபிறகுதான் சொசைட்டியில் கட்டினேன் என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை. நான் உண்மையை மறைத்து மற்றொரு லோன் எல்ஜசியில் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் பணம் கட்டியபிறகும் கடன்இல்லா சான்று வழங்கவில்லை என்று யாரிடமும் புகார் கொடுக்கவில்லை. நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில் எதிரியிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும் அதனால்தான் புகார் எதுவும் கொடுக்கவில்லை

என்று சொன்னால் சரியல்ல. நான் பெற்ற கடனை 2014 ஜுன்மாதம் முடித்துவிட்டு நான் சொசைட்டியில் மறுபடியும் ஒரு லோன் போட்டேன் என்றால் சரிதான். நான் பெற்ற முதல் கடன்தொகையை எதிரி அறிவுரைப்படி நேரடியாக கும்பகோணம் மத்தியகூட்டுறவு வங்கியில் கட்டினேன் என்றால் சரிதான். நான் தமிழக ஆசிரியர் கூட்டணியில் ஒரு உறுப்பினராக உள்ளேன். சொசைட்டியில் தலைவராக இருந்த ஜெயந்தி நான் சார்ந்துள்ள ஆசிரியர் கூட்டணியில்தான் உறுப்பினராக இருந்தார் என்றால் சரிதான். எதிரி எழுதிக்கொடுத்தாக சொல்லும் அசாஆ 28 ஆவணத்தை போலிசாரிடம் சொல்லவில்லை அதை காண்பித்தால் எதிரிக்கு வேலைபோய்விடும் என்று சொன்னதால் போலிசாரிடம் சொல்லவில்லை. போலிசார் என்னை விசாரித்த காலம் 2020 தா அல்லது 2021 என்று தெரியவில்லை. என்னை போலிசார் விசாரித்தபோது எதிரி சங்கத்தில் பணியில் இருந்தார். 2019 ம் ஆண்டே எதிரி சங்கத்திலிருந்து தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார் என்றும் நான் பணியில் இருந்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசாஆ 26 வரிசை ரசீதுகளை போலிசார் விசாரணையில் காண்பித்தேன். அவர்கள் அதை வாங்கிக்கொள்ளவில்லை. அவ்வாறு காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடன்நிலுவையில்லா சான்று பற்றி போலிசாரிடம் சொன்னேன் காண்பிக்கவில்லை. எனக்கே தெரிந்த காரணங்களுக்காக மேற்படி

ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் சொன்னதுபடி எதிரியிடம் எந்த தொகையும் செலுத்தவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.04.01 18:13:13 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

CC. No. 12 / 2025

PW : 9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. விஜய்பூபாலன் | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் 01 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

01.04.2025

முதல் விசாரணை

நான் தற்போது வலங்கைமான் ஒன்றியம் சந்திரசேகரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்தின் உறுப்பினராக இருந்து வருகிறேன். என்னுடைய கடன் உறுப்பினர் எண் 736. நான் 10.01.2015 ல் ரூ 2 ½ லட்ச ரூபாய் மேற்படி சங்கத்திலிருந்து கடன் பெற்றேன். அதில் 50 ஆயிரம் ரூபாயை பிணையதொகையாக பிடித்துக்கொண்டு ரூ 1,99,780/- ஐ காசோலையாக கொடுத்தார்கள். அதற்கான வட்டி வீதம் 14.5 சதவீதம் என்பதால் எனக்கு அதிக

சுமையாக தெரிந்ததால் ரூ 2 லட்சம் பணத்தை 21.01.2015 அன்றே திரும்ப செலுத்திவிட்டேன். பணம் செலுத்தும்போது ராஜு என்ற ஆசிரியர் உடனிருந்தார். ஆஜர் எதிரியிடம்தான் மேற்படி பணத்தை கட்டினேன். அதை தீர்மானம் போட்டுதான் கடனை முடிக்கவேண்டும் என்று சொன்னார். கடனை முடித்துவிடுங்கள் என நான் சொல்லிவிட்டேன். எனது ஜுலைமாதம் 2015 வருடத்தில் அரைவிடுப்பு சம்பளத்தில் சொசைட்டிக்காக ரூ 6 ஆயிரம் பிடிக்கபட்டிருந்ததை கவனத்தில் கொண்டு ஆஜர் எதிரியிடம் கேட்டேன். அதற்கு தவறாக பிடித்துவிட்டதாகவும், திரும்ப பணத்தை காசோலையாக கொடுப்பதாக சொல்லி 15.09.2015 ம் தேதியிட்ட காசோலை எண் 191505 என்று ரூ 6 ஆயிரம் எனக்கு கொடுத்தார். என்னுடைய கடனை முடித்ததற்கான கடன்இல்லா சான்று மேற்படி ஆஜர் எதிரி கொடுத்தார். அந்த கடன் இல்லா சான்றை நான் தொலைத்துவிட்டேன். மே 2018 ஆம் ஆண்டு சங்க தேர்தல் நடந்ததால் என்மீது கடன் நிலுவையில் இருப்பதால் தேர்தலில் நிற்க கூடாது என் சொன்னதால் நான் கடனை திரும்ப செலுத்திவிட்டதாக சங்கத்திடம் சொன்னேன். 05.10.2018 க்குள் கடனை முடித்துவிடுவதாக சொல்லி 24.09.2018 ல் எதிரி ஒரு கடிதம் கொடுத்தார். அந்த கடிதம் அசாஆ 22 ஆகும். (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எனக்கு கடன் நிலுவையில் இருப்பதாக கூறி சொசைட்டியிலிருந்து

கடிதம் வந்தது. அதில் எதிரி கட்டவேண்டிய பணத்தை கட்டிவிட்டதாகவும், நான் கட்டவேண்டிய பணத்தை திரும்ப கட்டசொல்லி அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது. நான் சொசைட்டியில் நேரில் சென்று கேட்டபோது பிணையதொகை ரூ.50 ஆயிரத்தை கழித்துகொண்டு ரூ.63,650/- ஐ கட்டி சொசைட்டியில் கடன்இல்லா சான்றுபெற்றேன். நான் 30.10.2019 அன்று கூட்டுறவு சங்கங்கள் விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான் அது அசாஆ 23 ஆகும். என்னிடம் காட்டப்படும் கடன் பட்டுவாடா பேரேடில் 10.01.2015 ல் ரூ. 2,50,000/- கடன் பெற்றதற்கான கையெழுத்து என்னுடையதுதான். அது அசாஆ 24 ஆகும். என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு கடன் எண் 1790 ல் உள்ளது என்னுடைய கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அசாஆ 25 ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

10.01.2015 ல் கடன்பெற்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2020 ஆம் ஆண்டு என்னை போலிசார் விசாரணை செய்தார்கள். 81 விசாரணை அதிகாரி 31.10.2019 ல் விசாரணை செய்தார்கள். விசாரணை அதிகாரி பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. நான் பணத்தை திரும்ப எதிரியிடம் செலுத்தும்போது ராஜு என்ற

ஆசிரியர் உடனிருந்தார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கடன்நிலுவை இல்லா சான்று எனக்கு கொடுத்ததாகவும் அதை நான் தொலைத்துவிட்டேன் என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தேர்தலில் நிற்பதற்காக நான் சொசைட்டியில் கேட்டபோது எனக்கு கடன் நிலுவையில் இருப்பதாக சொசைட்டியில் சொன்னார்கள் என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். 2015 ஆம் ஆண்டு நான் எதிரியிடம் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அதனால்தான் நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ரூ.6 ஆயிரம் காசோலை சங்கத்திலிருந்து கொடுக்கப்பட்ட காசோலை அதை அப்போதே பணமாக்கிவிட்டேன். நான் கடன்பெற்றவுடனே திரும்ப பணத்தை திரும்ப செலுத்தவில்லை என்றும் 1 ஆண்டு கழித்துதான் முடிக்கலாம் என்று எதிரி சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியில் 3 பிரிவுகள் உள்ளது. தமிழ்நாடு ஆரம்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழக ஆசிரியர் கூட்டணி, இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் சங்கம் என உள்ளது. மேற்குறிப்பிட்ட சங்க நிர்வாக பொறுப்புக்கு வரக்கூடியவர்கள் மேற்படி ஆசிரியர்கள் சங்கத்திலிருந்து தேர்ந்து எடுப்பார்கள் என்று சொன்னால் சரிதான். போலிசார் என்னிடம் விசாரித்து

கையெழுத்து வாங்கவில்லை. 81 விசாரணை அதிகாரி என்னிடம் விசாரித்து கையெழுத்து வாங்கிக்கொண்டார். அசாஆ 22 ஆவணமானது எதிரியால் கொடுக்கப்பட்டது அல்ல என்றும் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.04.01 18:13:28 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.